**செய்தி வெளியீடு எண்: 375** **நாள்: 10.06.2018**

**<u>மாநில திறன் மாநாடு 2018</u>**

மாநில திறன் மாநாட்டின் துவக்க விழா 09.06.2018 அன்று காலை சென்னை, கிண்டி அட்வான்ஸ்டு டிரெயினிங் இன்ஸ்டிடியூட்டில் நடைபெற்றது. இம்மாநாட்டில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்கள் கலந்து கொண்டு மாநாட்டைத் துவக்கி வைத்தனர். இம்மாநாட்டில் மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த திறன் படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டன. 10.06.2018 அன்று காலை மாநில திறன் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளாக, தமிழ்நாட்டின் திறன் சூழல்–திறன் முனைப்புகள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் உலக அளவிலான திறன் பயிற்சி குறித்த சிறந்த நடைமுறைகள் ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கங்கள் நடைபெற்றன.

மாநாட்டின் நிறைவு விழா நிகழ்ச்சி 10.06.2018 மாலையில் நடைபெற்றது. திரு. கதிர்வேலு, இணை இயக்குநர் (தொழிற் பழகுநர் பயிற்சி) அவர்களின் வரவேற்புரையை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அரசு முதன்மை செயலர் திரு.மங்கத் ராம் சர்மா, இ.ஆ.ப., அவர்கள் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த திறன் படைப்புகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள். பரிசு பெற்றவர்களை திறன் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர், திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப. மற்றும் திறன் மேம்பாட்டுக் கழக செயல் இயக்குநர் திரு.கிள்ளி சந்திர சேகர், இ.ஆ.ப. ஆகியோர் பாராட்டி வாழ்த்துரை வழங்கினர். 09.06.2018 மற்றும் 10.06.2018 ஆகிய இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகளின் தொகுப்புரையினை திறன் மேம்பாட்டுக் கழக கூடுதல் திட்ட இயக்குநர் திரு.இரா.தேவேந்திரன் அவர்கள் வழங்கினார். நிறைவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக, திட்ட இயக்குநர், திரு.ப.முஸ்தபா, அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார். திறன்மிகு தமிழகத்தை உருவாக்கும் ஒரு புதிய முயற்சியாக நடைபெற்ற இம்மாநாடு திறன் பெற்ற இளைஞர் சமுதாயம் தம் திறனை வெளிப்படுத்த கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. இந்த மாநாட்டினைத் தொடர்ந்து ஜூன் 11.06.2018 மற்றும் 12.06.2018 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள மாநில அளவிலான தனித் திறன் தேடல் போட்டிகளில் கலந்துக் கொண்டு தேர்வு செய்யப்படுவோர் ஜூன் 21 முதல் 23 வரை பெங்களூரில் நடைபெறும் திறன் போட்டியிலும் அதைத் தொடர்ந்து ஜூலை மாதம் டெல்லியில் நடைபெறும் தேசிய அளவிலான திறன் போட்டியிலும் கலந்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெறுவர். இத்தகவலை திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/– பா.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**